துன்பப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை

பாடம் 1, 3 ஜனவரி 2026

"கர்த்தருக்குள்
எப்பொழுதும்
சந்தோஷமாயிருங்கள்;
சந்தோஷமாயிருங்கள் என்று
மறுபடியும் சொல்லுகிறேன்!"

பிலிப்பியர் 4:4

பவுல் தனது ஊழியம் முழுவதும் கேட்போர் அனைவருக்கும் வானத்தையும் பூமியையும் இணைக்கக்கூடிய ஒரே ஒருவரை - இரட்கராகிய இயேசு கிறிஸ்துவை – முன் வைக்க தொடங்கினர்.

பிலிப்பியர் மற்றும் கொலோசெயர்களுக்கு எழுதிய கடிதங்களில், திருச்சபையை பரலோகத்திற்கு நெருக்கமாகவும், கிறிஸ்தவர்களை ஒருவருக்கொருவர் நெருக்கமாகவும் கொண்டு வர தன்னால் முடிந்த அனைத்தையும் செய்தார் அவ்வாறு செய்வதன் மூலம், இயேசு நமக்கு ஒப்படைத்த ஆணையை பூமியில் நிறைவேற்ற தேவனுடைய திருச்சபை இன்று பரலோகத்துடன் எவ்வாறு ஒன்றிணைய முடியும் என்பதை நமக்கு காட்டினார்.

- நிருபங்களின் ஆசிரியர்:
  - பவுல் சிறையில் அடைக்கப்பட்டார்.
  - சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாபதி
- நிருபங்களை பெறுநர்கள்
  - பிலிப்பியின் வரலாறு.
  - கொலோசெயின் வரலாறு.
  - பிலிப்பி மற்றும் கொலோசெயின் திருச்சபைகள்.

நிருபங்களின் ஆசிரியர்

பவுல் சிறையிலடைக்கப்பட்டார்

"கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டப்பட்டவனாயிருக்கிற பவுலும், சகோதரனாகிய தீமோத்தேயும், எங்களுக்குப் பிரியமுள்ளவனும் உடன்வேலையாளுமாயிருக்கிற பிலேமோனுக்கும்," (பிலேமோன் 1:1)

ரோமில் தனது முதல் சிறைவாசத்தின் போது–கி.பி. 60 முதல் கி.பி. 62 வரை–, பவுல் குறைந்தது 5 நிருபங்களை எழுதினார்: எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர், பிலேமோன், மற்றும் லவோதிகேயா திருச்சபைக்கு (இது இன்று வரை கிடைக்கவில்லை).

அவர் மீது கடுமையான குற்றச்சாட்டுகள் எதுவும் இல்லதபடியால், அவர் ஒரு வாடகை வீட்டில் தங்க அனுமதிக்கப்பட்டார். எப்போதும் ஒரு ரோம படைவீரரின் காவலில் இருந்தார்(அப். 28:16). இது அவர் தொடர்ந்து நற்செய்தியை பிரசங்கிக்க அனுமதித்தது, பிரிட்டோரியன் காவல்படையினருக்கும் கூட(பிலிப். 1:13).

நிருபங்களை ஆராய்வதன் மூலம், பவுலுக்கு பல ஒத்துழைப்பாளர்கள் இருந்ததை நாம் காணலாம்(கொலோ. 4:7-14; பிலே. 1:23-24). அவர் சீசரின் வீட்டாரிடமும் தொடர்பில் இருந்தார் (பிலிப். 4:22).

பவுல் விரைவில் விடுதலை பெறுவார் என்று நம்பியிருந்தார் (பிலே. 1:22), இரண்டாவது சிறைவாசத்தின் போது அவருக்கு இனி அந்த நம்பிக்கை இல்லை (2தீமோ. 4:6).

சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாபதி

"சுவிசேஷத்திற்காகச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாபதியாகிய நான் அதைப்பற்றிப் பேசவேண்டியபடி தைரியமாய்ப் பேசத்தக்கதாக," (எபேசியர் 6:19)

கிறிஸ்துவின் தூதராக இருக்க முடிவு செய்த தருணத்திலிருந்து, பவுலின் வாழ்க்கை அவ்வளவு எளிதாக இல்லை(2கொரி. 6:4-5).

பவுல் ரோமுக்கு கொண்டு செல்லப்படுவதற்கு முன்பு மூன்று முறை மட்டுமே சிறையில் அடைக்கப்பட்டதாக வேதம் பதிவு செய்திருக்கிறது: பிலிப்பியில்(அப். 16:22-24); எருசலேமில் (அப். 23:10); மற்றும் செசரியாவில் (அப். 23:33-35). ஆனால் நிச்சயமாக இன்னும் பல இருந்தன (2கொரி. 11:23).

இந்த எல்லா சிரமங்களிலும், பவுல் தன்னை ஒருபோதும் உதவியற்றவராக கருதவில்லை(2கொரி. 4:7-9). சுதந்தரமாக பிரசங்கிக்க முடியாமல், அவர் "சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாபதியானார்" (எபே. 6:19).

சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் போதும் நாம் துன்பங்களை சந்திக்கும் போதும், நாம் தேவன் மீது முழு நம்பிக்கை வைக்க வேண்டும், அவருடைய வார்த்தையை எப்போதும் மனதில் கொள்ள வேண்டும்; (2தீமோ. 2:15); மேலும், நமக்கு பலத்தையும் தைரியத்தையும் அளிக்கும் ஆறுதலளிப்பவராகிய பரிசுத்த ஆவியைப் பற்றிக்கொள்ள வேண்டும் என்பதை பவுலின் மனப்பான்மை நமக்கு கற்பிக்கின்றது (சகரி. 4:6).

நிருபங்களை பெறுபவர்கள்

“பவுல் அப்போஸ்தலன் தனது உழைப்பின் மூலம் மனந்திரும்பியவர்களுக்கு ஆழ்ந்த பொறுப்பை உணர்ந்தார். எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்களின் உண்மைத்தன்மைக்காக அவர் ஏங்கினார், “கிறிஸ்துவின் நாளில் நான் வீணாக ஓடவில்லை அல்லது உழைக்கவில்லை என்று பெருமை பேசுவேன்” பிலிப்பியர் 2:6 என்று அவர் கூறினார். தனது ஊழியத்தின் விளைவை கண்டு அவர் நடுங்கினார். தனது கடமையை நிறைவேற்ற தவறினால், ஆன்மாக்களை இரட்சிக்கும் பணியில் திருச்சபை தன்னுடன் ஒத்துழைக்கவில்லை என்றால், தனது சொந்த இரட்சிப்பு கூட ஆபத்தில் இருக்கக்கூடும் என்று அவர் உணர்ந்தார்”

எலன். ஜி. உவைட். (அப்போஸ்தலருடைய நடபடிகள், பக். 168)

பிலிப்பியின் வரலாறு

"அங்கே இராத்திரியிலே பவுலுக்கு ஒரு தரிசனம் உண்டாயிற்று; அதென்னவெனில், மக்கெதோனியா தேசத்தான் ஒருவன் வந்துநின்று: நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று தன்னை வேண்டிக்கொண்டதாக இருந்தது." (அப் 16:9)

பவுலின் இரண்டாவது மிஷனரி பயணத்தின் போது, அவருடைய திட்டங்கள் திருப்பத்தை ஏற்ப்படுத்தின. பரிசுத்த ஆவியானவர் அவருடைய அடிகளை வழிநடத்தி சென்றார் (அப். 16:6-12):

1. பவுல் பிரிகியாவுக்கு சென்றார் (6மு)
2. அங்கேயும் சரி கலாத்தியாவிலும் சரி அவரால் பிரசங்கிக்க முடியவில்லை (6பி)
3. அவர் மீசியாவுக்கு வந்தார் (7மு)
4. அவர் பித்தினியாவுக்கு செல்ல முயன்றார், ஆனால் அவரால் முடியவில்லை (7பி)
5. அவர் துரோவாவுக்கு சென்றார், அங்கு அவருக்கு ஒரு தரிசனம் கிடைத்தது(8-10)
6. அவர் சாமோத்திராக்கேக்கு பயணம் செய்தார்(11மு)
7. அங்கிருந்து நெயாபோலிக்கும் (11பி)
8. இறுதியாக அவர் பிலிப்பிக்கு வந்தார் (12)

ஐரோப்பாவில் நற்செய்தியை பிரசங்கிக்க தொடங்க பரிசுத்த ஆவியால் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் பிலிப்பி. முழு ரோமானிய நகரமாக இருந்ததால், பிலிப்பியர்கள் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டனர் மற்றும் பிறப்பால் ரோமானிய குடியுரிமையை பெற்றிருந்தனர்.

பிலிப்பியின் வரலாறு

"அங்கே இராத்திரியிலே பவுலுக்கு ஒரு தரிசனம் உண்டாயிற்று; அதென்னவெனில், மக்கெதோனியா தேசத்தான் ஒருவன் வந்துநின்று: நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று தன்னை வேண்டிக்கொண்டதாக இருந்தது." (அப் 16:9)

ஒரு புதிய நகரத்திற்கு பவுல் வந்தவுடன் ஜெப ஆலயத்திற்கு செல்வது அவருடைய வழக்கம். ஆனால் பிலிப்பியில் ஜெப ஆலயம் இல்லை! ஓய்வுநாளில் அவர்கள் வழிபாட்டுக்கான ஒரு இடத்தை கண்டுபிடித்து, அங்கு கூடியிருந்த பெண்களுக்கு பிரசங்கித்தார்கள் (அப். 16:13).

இந்த கூட்டத்திலிருந்துதான் முதல் ஐரோப்பிய மதம் மாறிய லீதியாள் தோன்றினார். அவளும் அவளுடைய முழு குடும்பமும் ஞானஸ்நானம் பெற்றனர் (அப். 16:14-15).

ஆனால் எதிரி சும்மா இருக்கவில்லை. பவுலை ஆதரிப்பது போல் நடித்து மக்களின் மனதை குழப்ப ஒரு குறிசொல்லுகிற ஸ்திரியை அவன் தூண்டினான் (அப். 16:16-17). அந்த பெண் விடுவிக்கப்பட்டபோது, பவுலுக்கும் சீலாவுக்கும் பிரச்சனை தொடங்கின (அப். 16:18-24).

விளைவு: சிறைச்சாலைக்காரன் மற்றும் அவரது குடும்பத்தினரின் மதமாற்றம் (அப். 16:25-33). பரிசுத்த ஆவியின் வல்லமையுடனும் வழிகாட்டுதலுடனும் நற்செய்தி ஐரோப்பாவில் நுழைந்தது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

கொலோசெயின் வரலாறு

"அதை எங்களுக்குப் பிரியமான உடன்வேலையாளும், உங்களுக்காகக் கிறிஸ்துவின் உண்மையான ஊழியக்காரனுமாயிருக்கிற எப்பாப்பிராவினிடத்தில் நீங்கள் கற்றறிந்திருக்கிறீர்கள்;" (கொலோசெயர் 1:7)

பவுல் ரோமில் சிறையில் இருந்தபோது எப்பாப்பிரா அவருடைய தோழராக இருந்தார் (பிலே. 1:23). கொலோசேயை சேர்ந்த இவர் (கொலோ. 4:12), அந்த நகரத்திற்கு நற்செய்தியை அறிமுகப்படுத்தியவர் (கொலோ. 1:7).

லாவோதிக்கேயா மற்றும் நெயாபோலிக்கு அருகிலுள்ள பிரிகியா மாகாணத்தில் கொலோசெ ஒரு நகரமாக இருந்தது, அங்கு எப்பாப்பிராவும் பிரசங்கித்தார்(கொலோ. 4:13). அங்கு ஒரு பெரிய யூத மக்கள் தொகை இருந்தது,. அங்கு வாழ்ந்த மிக முக்கியமான யூதர்களில் ஒருவர் பவுலின் ஒத்துழைப்பாளரான பிலேமோன் ஆவார், அவருடைய வீட்டில் ஒரு தேவாலயம் கூடியது (பிலே. 1-2).

பிலேமோனின் அடிமைகளில் ஒருவரான ஒனேசிமு ரோமாபுரிக்கு ஓடிப்போனார், அங்கு அவர் பவுல் மூலம் இயேசுவை ஏற்றுக்கொண்டார் (பிலி. 10-11). ஒனேசிமுவை தனது எஜமானரிடம் திருப்பி அனுப்புவதன் மூலம், எஜமானர்களுக்கும் அடிமைகளுக்கும் அல்லது மேலதிகாரிகள் மற்றும் கீழ்நிலை அதிகாரிகளுக்கும் இடையிலான உறவு எப்படி இருக்க வேண்டும் என்பதைக் காட்டினார் (பிலே. 12-17).

பிலிப்பி மற்றும் கொலோசெயின் திருச்சபைகள்

"இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரராகிய பவுலும் தீமோத்தேயும், பிலிப்பி பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும், கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும் எழுதுகிறதாவது:" (பிலிப்பியர் 1:1)

பிலிப்பியர் மற்றும் கொலோசெயர் கடிதங்களுக்கான அறிமுகங்கள், மிகவும் ஒத்தவை, இரண்டு முக்கியமான அம்சங்களை நமக்கு காட்டுகின்றன (பிலே. 1:1; கொலோ. 1:1-2)

தேவனுடைய பார்வையில், திருச்சபை உறுப்பினர்கள் தவறுகள் செய்தாலும் பரிசுத்தமாகவும் உண்மையாகவும் இருக்கிறார்கள்

தேவாலயத்தில் ஒரு ஒழுங்கு உள்ளது. அதன் உறுப்பினர்களில் சிலர் மற்றவர்களை விட அதிக அதிகாரத்தையும் பொறுப்பையும் கொண்டுள்ளனர்:

- பவுல் ஒரு அப்போஸ்தலன், ஒரு உயர்மட்ட தலைவர்
- தீமோத்தேயு அவருடைய கூட்டுபணியாளர் (போதகர்)
- ஆயர்கள் உள்ளூர் தலைவர்கள்(மூப்பர்கள்)
- உதவியாளர்கள் ஆலயத்தை நிர்வகிக்கிறார்கள்

பிலிப்பியர்கள் தனக்கு உதவியதற்காக சிறையில் இருந்து பவுல் அவர்களுக்கு நன்றி கூறுகிறார்(பிலே. 4:18).

அவர் தனது கூட்டாளிகளை கொலோசெயர்களுக்கு ஆறுதல் கூற அனுப்பகிறார்(கொலோ. 4:7-9).